# Salve Regina

Society of St. Pius X, Palayamkottai.
Tel:0462-2586201; 2572389. e-mail: sspxindia@gmail.com

மார்ச் 2007 மலர்: 2 இதழ்: 3
(தனிச்சுற்றுக்கு மட்டும்)

# ஜெபம் - தபம் - பரிகாரம்!

**"நீங்கள் தபஞ் செய்யாவிட்டால், எல்லோரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்"** (லூக். 13: 3)

சேசுவில் அன்பார்ந்த விசுவாசிகளே,

நாம் தபசு காலத்தில் இருக்கிறோம். நமது பரிசுத்த வேதத்தின் மிகவும் முக்கியமான திருநாளாகிய பாஸ்கா திருவிழாவுக்கு தயாரிப்பாகவும், நமது பாவங்களுக்குப் பரிகாரமாகவும் 40 நாட்களைக் கொண்ட தபசு காலத்தை தாய்த்திருச்சபை நமக்குக் கொடுத்துள்ளது. இந்த **40** என்ற எண், பாவத்தின் விளைவாக அனுபவிக்க வேண்டிய தண்டனைகளையும், துன்பங்களையும் சுட்டிக்காட்டுகிறது என்று குறிப்பிடுகிறார் அர்ச். ஜெரோம்.




பழைய ஏற்பாட்டைப் பார்த்தால், அங்கே அநேக இடங்களில் இந்த **40** என்ற எண் தண்டனைக் காலத்தைக் குறிப்பிடுவதைக் காணலாம். உதாரணமாக: மனிதனைப் படைத்ததற்காக வருந்திய சர்வேசுரன், நோவேயின் குடும்பம் நீங்கலாக, மனித குலம் முழுவதையும் 40 பகலும், 40 இரவும் ஜலப்பிரளயத்தை உண்டாக்கித் தண்டித்தார். (காண்க: ஆதி. 7:12)

எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ராயேல் மக்களை மீட்டு அழைத்து வந்த சர்வேசுரனுக்கு எதிராக முறுமுறுப்பும், நன்றிகெட்டத்தனமும் காண்பித்ததற்குத் தண்டனையாக, அவர்கள் வாக்களிக்கப்பட்ட பூமியை சென்றடைவதற்கு முன் 40 வருடகாலமாக பாலைவனத்தில் அலைந்து திரியும்படி விடப்பட்டார்கள் (காண்க: எண். 16:33). அதே போன்று, பழைய ஏற்பாட்டிலும் சர்வேசுரனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மோயீசனும், எலியாசும் அவரை அணுகிச்செல்ல அனுமதிக்கப்பட்டார்கள். மோயீசன் சீனாய் மலையிலும், எலியாஸ் கார்மெல் மலையிலும் சர்வேசுரனைச் சந்தித்தார்கள். அதற்கு அவ்விருவரும் 40 நாட்கள் தவமிருந்து தங்களையே தயார் செய்தார்கள். இந்த சம்பவங்களை எல்லாம் நினைவு கூர்ந்தால், நமது இரட்சண்யத்துக்காக மனுவுருவெடுத்து, பாடுகளனுபவித்து தன்னையே தபசிற்கு உட்படுத்திய நமதாண்டவர் எதற்காக 40 நாட்களைத் தேர்ந்தெடுத்தார் என்பது விளங்கும். தவமானது சர்வேசுரனுடைய கோபத்தை அமர்த்தவும், நமது ஆத்துமத்தைச் சுத்தப்படுத்துவதுமான வல்லமையைக் கொண்டுள்ளது என்பதை பழைய ஏற்பாட்டின் காட்சிகள் மூலமாகவும், புதிய ஏற்பாட்டில் நமதாண்டவரின் மாதிரிகையின் மூலமாகவும் திருச்சபை நமக்கு உணர்த்துகிறது.

நாம் அனைவரும் பெரும் பாவிகளாதலால், சர்வேசுரனுடைய இரக்கத்தையும், பொறுத்தலையும் கேட்டு மன்றாட வேண்டும். இதை எப்படிச் செய்வது? நம்முடைய பாவங்களாலும், உலகத்தார் அனைவரின் பாவங்களாலும் எழும் தேவ கோபத்தை எப்படி தணிப்பது, மனிதர்களின் பாவச்செயல்களுக்கு எவ்வாறு பரிகாரம் செய்வது, என்ன தபசு செய்வது என்றெல்லாம் பலவிதமான கேள்விகள் நம் உள்ளத்தில் எழுகின்றன.

அபரிமிதமான அறிவியல் முன்னேற்றத்தால் கம்ப்யூட்டர் எலக்ட்ரானிக் யுகமாகிப்போய்விட்ட இவ்வுலகில், மனிதன் வசதியான

**"பரிசுத்த ஆண்டவரே... தேவரீர் எங்கள் ஆண்டவராகிய கிறீஸ்துவின் வழியாக, சரீர உபவாசத்தினால் எங்களுடைய பாவக்குணங்களை அடக்குகிறீர்; எங்கள் மனதை மேலெழுப்புகிறீர், புண்ணியத்தையும் சம்பாவனைகளையும் தந்தருளுகிறீர்..."**

— தபக்கால முகவுரை

ஆடம்பர வாழ்வுக்கு தன்னைப் பழக்கிக் கொண்டுவிட்டான். ஏன், இன்று பெருவாரியான கத்தோலிக்கர்கள்கூட "தபம்" அல்லது "பரிகார வாழ்வு" என்ற சொல்லை ஏதோ கேட்கக்கூடாத ஒன்றாகக் கருதி அதற்கும், தங்களுக்கும் சம்பந்தமில்லை என்பது போல அதிர்ச்சியடைவதைக் காண்கிறோம். எல்லா வசதிகளும் கிடைத்து 'சொகுசு' வாழ்வு வாழ்பவனுக்கு அதனை இழப்பது, விட்டுக்கொடுப்பது என்பது ஏதோ வாழ்வே பறிபோனது போல நினைக்கும் நிலைக்கு மனிதர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இந்தச் சூழ்நிலையில் ஒரு சராசரி நவீன கிறீஸ்தவன் இந்த தபசு காலத்தை எப்படிச் செலவிடுவான்? அவனுக்கு 'தபசு' என்றால் என்ன? அது எதில் அடங்கியுள்ளது என்பது கூட தெரியுமா? என்பது சந்தேகம்!

இதற்கெல்லாம் என்ன காரணம்? நவீன அறிவியல் வளர்ச்சி - முன்னேற்றங்கள் என்று ஒருபுறம் இருந்தாலும், ஒரு கிறீஸ்தவனுக்கு இன்றைய நவீன திருச்சபையின் அவலநிலையும் ஒரு முக்கிய காரணமாகும். சத்தியவேதமாம் கத்தோலிக்கத் திருச்சபையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், நவீன போதனைகள், வழிபாட்டில் மாற்றங்களும், காலம் காலமாகப் பாரம்பரியமாகக் கடைபிடிக்கப்பட்டு வந்த சில தபசுகால நடைமுறைகள்: ஆண்டு முழுவதிலும் அனுசரிக்கப்படும் Ember days என்று அழைக்கப்பட்ட சதுர்கால - தவநாட்கள் (6-ம் பக்கம் காண்க) குறைக்கப்பட்டு, நவீன பஞ்சாங்கத்திலிருந்தே நீக்கப்பட்டு விட்டன. பெரிய திருநாட்களுக்கு முந்தியநாளை தயாரிப்புநாளாக (Vigil) அனுசரிக்கப்படும் வழக்கம் இன்று குறைந்து விட்டது. பாவப்பரிகார திவ்விய பலி வெறும் இராப்போசனக் கொண்டாட்டமாகி விட்டது. புதிய பஞ்சாங்கத்தின்படி சாம்பல் புதன் மற்றும் பெரிய வெள்ளி மட்டுமே உபவாச நாட்களாக உள்ளது. வருடத்தின் அனைத்து வெள்ளிக்கிழமைகளில் சுத்தபோசனமாக மாமிச உணவு விலக்கப்பட்டிருந்தும் ஒரு அற்பக் காரணத்திற்காக மாற்றிக் கொள்ளும் நிலை உள்ளது. அதோடு மட்டுமல்ல, அப்படியே வெள்ளிக்கிழமைகளில் மாமிச உணவு உண்டால் அதற்கு தண்டனையாக வேதாகமத்திலிருந்து சிறிது பகுதியைப் படித்தல், சிறு தர்மம் செய்தல், சிறு ஜெபம் செய்தல் என்ற அற்ப காரியத்தைச் செய்து சுத்தபோசனத்தின் உன்னத காரணத்தையே கேலிக்கூத்தாக்கும் நிலையுள்ளது. இப்படியாக நவீன திருச்சபையில் தபசின் பொருளை, வெளி அடையாளங்களை அகற்றும் கொடுமை நடந்து வருகிறது.

இப்போது தபசு - தப உணர்வு எதில் அடங்கியுள்ளது என்பதைச் சற்று கவனிப்போம்: தபசு ஆன்ம மனஸ்தாபம், சரீர ஒறுத்தல் என்ற இரு காரியங்களில் அடங்கியுள்ளது. இரண்டுமே முக்கியமானவை. ஏனெனில், ஆன்மா ஜென்மப்பாவத்தின் விளைவாக பாவசார்புடையதாகவும், அதை விரும்பித் தேடுவ தாகவும் இருக்கிறது. அதே நேரத்தில் சரீரம் பெரும்பான்மையான சமயங்களில் ஆன்மா பாவத்தைக் கட்டிக்கொள்வதற்கு உடந்தையாக இருந்தும், பாவச்செயலினால் எழும் சரீர இன்பங்களை அனுபவித்தும் இருக்கிறது. ஆகவே மனதால் (ஆன்மா) மனஸ்தாபப்பட்டால் மட்டும் போதாது, சரீரத்தால் ஒறுத்தலும் செய்ய வேண்டும். ஆயினும் தபசுக்கு உயிர் கொடுத்து மெய்யான தவமாக மாற்றுவது நமது **ஆத்தும மனஸ்தாபமே!**

சுவிசேஷம், ஊதாரி மைந்தன், அர்ச். மரியமதலேனம்மாள், சக்கேயு, அர்ச். இராயப்பர் இவர்களின் உதாரணங்களின் மூலமாக இதை போதிக்கிறது. எனவே ஆத்துமமானது, அனைத்துப் பாவங்களையும் விட்டுவிடுவதற்கு உறுதியான பிரதிக்கினை எடுக்க வேண்டும். செய்த பாவத்திற்காக முழுமனதோடு மனம் வருந்த வேண்டும்; பாவத்தை வெறுக்க வேண்டும்; அதுமட்டுமல்லாமல் அனைத்து பாவச்சந்தர்ப்பங்களையும் விட்டு விலக வேண்டும். இந்த உள்ளார்ந்த மனநிலையைதான் "**மனந்திரும்புதல்**" என்று சுவிசேஷத்தில் குறிப்பிடப்படுகிறது. ஒவ்வொரு கிறீஸ்துவனிடத் திலும் இந்த உள்ளார்ந்த மனநிலை இருக்க வேண்டும்.

அதோடு மட்டுமல்லாது, தளராத மனதுடன் திருச்சபையின் பாரம்பரிய ஒருசந்தி, சுத்தபோசனம் போன்றவற்றை கடைப் பிடிப்பவர்களுக்கு மனஸ்தாபம் மற்றும் சரீர ஒறுத்தல்கள் தவிர மற்ற உன்னதமான காரியங்களும் தேவை. அவை யாதெனில், பரிசுத்த வேதாகமம் அடிக்கடி குறிப்பிடும் ஜெபம், தானதர்மம் ஆகியவையே. **ஒருசந்தி உபவாசம்** என்ற வார்த்தையில் எல்லா வகையான பரித்தியாக முயற்சிகளும் அடங்கியிருப்பது போல, **ஜெபம்** என்ற சொல்லின் கீழ் ஆத்துமத்தின் அனைத்து பக்தி முயற்சிகளும் அடங்கும்.

இந்த தபசு காலத்தில் நாம் மிகுந்த உற்சாகத்துடனும், பக்தியோடும், தேவசிநேகத்தோடும் தவமுயற்சிகளை அனுசரிப்போமாக. அனுதின திவ்விய பலிபூசையைக் கண்டு ஒப்புக்கொடுத்தல், ஞானவாசகம் (நமதாண்டவரின் பாடுகளைக் குறித்து), விசுவாச சத்தியங்களைத் தியானித்தல், ஞானப் பிரசங்கங்களைக் கேட்டல், எல்லாவற்றிற்கும் மேலாக நல்ல தயாரிப்புடன் பாவசங்கீர்த்தனம் செய்து திவ்விய நன்மை உட்கொள்வது போன்றவைகளில் பிரமாணிக்கத்தோடு ஈடுபடு வோமாக. இந்த தவத்தின் காலங்களில் நாம் அதிக தேவ வரப்பிரசாதங்களைப் பெற உறுதியான வழி யாதெனில்: உலகத்தன்மையான மனப்பான்மையை விட்டுவிட்டு, உலகச் சந்தடிகளை விட்டு விலகி, ஒதுங்கி வாழ்வதாகும். எனவே இந்த 40 நாட்களிலும் உலக ஆடம்பரங்கள், வேடிக்கை, கேளிக்கை வினோதங்கள் ஆகியவைகளை ஒதுக்கி வாழ்ந்து, சர்வேசுரனுடைய இரக்கத்தையும், வரப்பிரசாதங்களையும் பெற முயற்சிப்போமாக.

**அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை**
**பாளையங்கோட்டை**

**இந்த தவக்காலத்தில் சாம்பல் புதன், பெரிய வெள்ளி மற்றும் வாரத்தின் அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் பக்தியார்வத்தோடு ஒருசந்தி சுத்தபோசனம் அனுசரிப்போமாக!**

# சேசுகிறீஸ்துவின் மனிதாவதாரம்!

**"வார்த்தையானவர் மாமிசமாகி, இஷ்டப்பிரசாதமும் சத்தியமும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசமாயிருந்தார்" - (அரு. 1:14)**

பரலோகமும், பூலோகமும் ஆவலோடும் ஆர்வத்தோடும் காத்திருந்த நிகழ்ச்சி அது! மகா பரிசுத்த தமதிரித்துவ தேவனின் இரக்கமுள்ள மீட்பு திட்டத்தின் துவக்கமே அந்த திருநிகழ்ச்சி! ஆதாமின் மீறுதலால் மாசுபட்டு, மோட்சம் அடைபட்டுபோன மனுக் குலம் அங்கலாய்த்து எதிர்பார்த் திருந்த நிகழ்வு அது! பாதாளத்தின் இருளில் விடப்பட்டிருந்த பழைய ஏற்பாட்டின் தீர்க்கத்தரிசிகளும், பிதாபிதாக்களும் சர்வேசுரனை தயவோடு மன்றாடி கேட்டுக்கொண் டிருந்த மகா பெரிய நிகழ்ச்சி அது!!

அது என்ன நிகழ்ச்சி?! அதுவே, **சேசுகிறீஸ்துவின் மனி தாவதார** திருநிகழ்ச்சி! ஆம். அதுவேதான் ஆதியில் சிங்காரவனத் தில் பரமபிதா, சர்ப்பத்தைச் சபித்து மனுக்குலத்திற்கு வாக்களித்த மீட்பரின் அவதார திருநிகழ்ச்சி பாவத்தால் இருளடைந்து போன உலகிற்கு ஒளியாக சேசு மீட்பர் தோன்றிய நன்னாள். மனித புத்திக்கு எட்டாத மகா பரிசுத்த தேவ இரகசியமான வார்த்தையான சர்வேசுரன் மனுவுருவெடுத்த அற்புத நாள். அந்த நாளே **கிறிஸ்மஸ்** என்றால் மிகையாகாது. ஆம்! அன்றுதான் சர்வேசுரனாலே அனுப்பப்பட்ட கபிரியேல் தூதர் அர்ச். கன்னிமாமரியிடம் இரட்சகர் சேசுகிறீஸ்துவின் பிறப்பின் மங்கள செய்தியை அறிவித்து; இஸ்பிரீத்துசாந்துவானவர் எழுந்தருள, உன்னதருடைய வல்லமை அர்ச். கன்னிமரியம்மாளுக்கு நிழலிட, நித்திய வார்த்தையான தேவன் மாமரியின் திருஉதரத்தில் கருவாக உருவானார் (காண்க. லூக். 1:35). உருவில்லா தேவன் உருவெடுக்க மகா பரிசுத்த கன்னிதாயிடம் குடிகொண்டார்! "வார்த்தையானவர் மாமிசமாகி இஷ்டப்பிரசாதமும் சத்தியமும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசமாயிருந்தார்'' (அரு. 1:14).



## மாமரியின் தகுதி!

சுதனாகிய சர்வேசுரனையே கருவாக, மகவாக தமது திருவுதரத்தில் பெற்றுக்கொண்ட மாமரி எத்தகையவர்கள்! அவர்களது உயர்வு - மகிமை எத்துணை மேன்மையானது? அவர்களது பரிசுத்ததனம் எத்தகையது? என்று யாராலும் எடுத்துரைக்க முடியுமா? என்றால் "ஒருபோதும் முடியாது" - " Nunquam satis De Maria " என்று தாழ்ச்சியோடு கூறுகிறார் திருச்சபையின் வேதபாரகரான அர்ச். பெர்னார்ட். ஏனெனில், பரமபிதாவே கபிரியேல் சம்மனசான வரை அவர்களிடம் அனுப்பி, ''பிரிய தத்ததினாலே பூரணமானவளே வாழ்க! கர்த்தர் உம்முடனே, ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப் பட்டவள் நீரே..."(லூக். 1:28) என்று வாழ்த்தியுள்ளார். இப்படி அனுப்பப் பட்ட கபிரியேல் தூதரும் மாமரி யிடம்..."சர்வேசுரனிடத்தில் கிருபை பெற்றிருக்கிறீர்...'' (லூக். 1:30) என்று போற்றுகிறார். இஸ்பிரீத்து சாந்துவானவரோ எலிசபெத்தம்மாள் வழியாக, ''...ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள்...நீரே பாக்கிய வதி...'' (லூக். 1:42) என்று வாழ்த்துகிறார். அதுமட்டுமல்லாமல் அர்ச். கன்னிமரியம்மாளே தமது தெய்வீக தாய்மையால் தமக்கு வந்த உயர்வை எண்ணி மகிழ்ந்து ஆண்டவரை மகிமைப்படுத்தும் படியாக பாடிய பாடலில், "இக்கால முதல் எல்லா தலைமுறை களும் என்னை பாக்கியவதி என்பார்கள்...'' (லூக். 1:48) என்று உரைத்துள்ளார்கள். தாய்த்திருச்சபையும்கூட தமது பாஸ்குகால திரிகால ஜெபத்தில் "பரலோகத்துக்கு இராக்கினியே!... பாக்கிய வதியான உமது திரு உதரத்தில் அவதரித்தவர், திருவுளம்பற்றின வாக்கின்படியே உயிர்த்தெழுந்தருளினார் என்று போற்றி ஜெபிக்கிறது.

திருச்சபையின் தலைசிறந்த வேதசாஸ்திரியான அர்ச். தாமஸ் அக்வினாஸ், "நமதாண்டவராகிய சேசுவை பெற்றெடுக்க

**"இதோ நான் ஆண்டவருடைய அடிமை,**
**உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது"**
(லூக். 1:38)

கன்னிமரியாய் பாக்கியம் பெற்றார்கள்; அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வரப்பிரசாதத்தால் சர்வேசுரனுடைய தாயாவதற்கு தகுதியுடையவர்களாகவும், அதற்கேற்ற தூய்மையும், பரிசுத்தத்தனத்தையும் அடைந்திருந்தார்கள்'' என்று கூறுகிறார். இதைவிட மேலாக, மாதா தமது தெய்வீகத் தாய்மையின் அந்தஸ்திற்காக ஒரு தெய்வீக நிலைக்கு உயர்த்தப்பட்டதை உணர்த்தும் வண்ணம் அர்ச். சியென்னா பெர்னார்டின், "ஒரு மாது சர்வேசுரனைக் கர்ப்பந்தரித்து பெற்றெடுக்கவேண்டுமானால், அவள் ஒரு வகையில் அளவற்ற வரப்பிரசாதங்களின் உதவியால் கடவுளுக்கு சமமாக உயர்த்தப்பட்டிருக்க வேண்டும்!'' என்று கூறி வியந்து போகிறார்.

## மீட்பு திட்டத்தில் மாதாவின் பங்கு!

கபிரியேல் தூதர் அர்ச். கன்னிமரியம்மாளுக்கு சேசுவின் பிறப்பின் மங்கள வார்த்தையை அறிவித்தபின், மாதாவின் சம்மதத்திற்கு காத்திருந்தார். தேவதூதரிடம் தமது ஐயங்களைக் கேட்டுத் தெளிந்த மாமரி, ஒரு கணமும் தாமதியாமல "...இதோ, நான் ஆண்டவருடைய அடிமை. உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது...'' (லூக். 1:38) என்று பதிலளித்தார்கள். அக்கணத்திலேயே மாதாவின் மகா பரிசுத்த இரத்தத்திலிருந்து இஸ்பிரீத்துசாந்துவின் செயலால் கிறீஸ்து கருவானார். அர்ச். கன்னிமரியாயின் திருவுதரத்தில் தேவகுமாரனான சேசுகிறீஸ்துவின் மனிதாவதாரம் - தேவமானிட ஒன்றிப்பு (Hypostatic union) நிறைவேறியது! பரலோகத்தையும் பூலோகத்தையும் அதன் சத்துவங்கள் யாவற்றையும் உண்டாக்கி, காத்து பராமரித்து வருகிற எல்லாம் வல்ல தேவன், மனுக்குலத்தின் மீது தாம் கொண்டிருக்கும் அளவற்ற இரக்கத்தினாலும், நேசத்தினாலும் ஒன்றுமே இயலாத ஒரு மகவாக உருவெடுக்கிறார். இதனால் அர்ச். கன்னிமரியம்மாள் "Theotokose" - "தேவதாய்" ஆனார்கள்! மனுக்குலத்திற்கு சேசு மீட்பரை பெற்றுத் தந்து மாமரி மீட்பரின் தாய் ஆனார்கள். முதல் ஏவாளின் கீழ்ப்படியாமையால் வரப்பிரசாத வாழ்வை இழந்து போன மனுக்குலத்திற்கு இரண்டாம் ஏவாளாக தமது "Fiat"- "உமது வாக்கின்படியே ஆகட்டும்'' என்ற தாழ்ச்சி நிறைந்த கீழ்ப்படிதலால், தேவவரப்பிரசாதத்தின் ஊற்றானவரையே (மீட்பர்) தம்முள் ஈர்த்துக்கொண்டு மனுக்குலத்திற்கு மீண்டும் உயிரளித்த ஜீவியத்தின் தாயாகவும் ஆனார்கள். தேவசித்தத்தின்படியே, சர்வேசுரனின் மீட்பு திட்டத்தில் அவருடைய சகல பாடுகளிலும் பங்கேற்று சிலுவையில் மீட்பை நிறைவேற்றும் வியாகுலத் தாயாகவும் ஆனார்கள்.

கிறீஸ்தவர்களாகிய நாம் வார்த்தை மனுவுருவெடுத்த திருநிகழ்ச்சியின் மீது பக்தி கொள்ளவேண்டும். சேசுவும் தேவமாதாவும் நம்மீது கொண்ட இரக்கத்தையும், அன்பையும் உணர்ந்து, அறிந்து அதற்காக நன்றியறிந்து அவர்களை நேசித்து நமது மீட்புக்காக மன்றாடி வரவேண்டும். மனிதாவதார திருநிகழ்ச்சியை நினைவுகூற ஜெபிக்கப்படும் திரிகால ஜெபத்தை தவறாமல் நன்றி உருக்கத்தோடு ஜெபித்து வருவோமாக. நமதன்னையைப் போன்று நமக்கு வரும் துன்பத்துயரங்களை அமைதலோடு "அப்படியே ஆகக்கடவது என்று ஏற்று உத்தம கிறீஸ்தவ வாழ்வு வாழ்வோமாக.

◆◆◆◆◆

# திருச்சபையின் பரிபாலகரான அர்ச். சூசையப்பர்

**பிதாப்பிதாவான அர்ச். சூசையப்பரின் மகிமைகளையும் அவர் சர்வேசுரனிடத்தில் கொண்டுள்ள மன்றாட்டின் வல்லமையையும் அளவிட்டுக் கூற முடியாது. ஏனெனில், சர்வேசுரன் "சேசு – மரியாய்" என்ற தமது விலைமதிப்பில்லாத பொக்கிஷங்களை அவரிடமே ஒப்படைத்தார். அதைப்போல கிறீஸ்துவின் ஞானசரீரமாகிய கத்தோலிக்கத் திருச்சபைக்கும் அவரே பாதுகாவலராக இருக்கிறார். அதனை உறுதி செய்து 1870, டிசம்பரில் முத்.9–ம் பத்திநாதர் அர்ச். சூசையப்பரை திருச்சபையின் பரிபாலகராக அறிவித்து, அதனை அவரது கரங்களில் ஒப்படைத்தார். அதனால் அக்காலத்தைய தீமைகளிலிருந்து திருச்சபைக் காப்பாற்றப்பட்டது.**



**இன்று திருச்சபையானது, அதன் வரலாற்றில் ஒருபோதும் இல்லாத அளவில் நவீனமென்ற கொடிய தப்பறையால் பீடிக்கப்பட்டு அல்லலுற்று வருகிறது. திருச்சபையெங்கும் விசுவாச மறுதலிப்பு, சத்தியங்களை மாற்றுதல், திருவழிபாட்டில் குழப்பம், தேவ ஊழியர்களின் அசமந்தம், தேவ அழைத்தலின் இழப்பு என துன்புற்று வருகிறது. அதனால் ஆன்மசேதம் ஏற்பட்டுள்ளது. இதிலிருந்து திருச்சபையைக் காப்பாற்ற அதன் பரிபாலகரான அர்ச். சூசையப்பரை நோக்கி மன்றாடுவோம். அவரே தமது வல்லமையுள்ள மன்றாட்டாலும், தவறாத பாதுகாவலாலும் திருச்சபையைப் பாதித்துள்ள நவீனத்தை அழித்து, நிர்மூலமாக்கி சத்தியத் திருச்சபையைக் காப்பாராக.**


**திருச்சபையின் பரிபாலகரான அர்ச். சூசையப்பரே திருச்சபையைக் காப்பாற்றும்!**



# திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை

## அறிந்து கொள்வோம்!

["மோட்சத்திற்கு இப்பக்கம் அழகில் சிறந்தது திரிதெந்தீன் பலிபூசையே" என்று போற்றுகிறார் திருச்சபையின் தலைசிறந்த ஞான ஆசிரியரான சங். ஃபேபர் சுவாமி. பல நூற்றாண்டுகளாக திருச்சபையை வளப்படுத்தி, உலகத்தை அர்ச்சித்து வந்த மெய்யான கல்வாரிப்பலி திரிதெந்தீன் திவ்விய பலிபூசையே! அதன் ஒவ்வொரு பகுதியையும் தெளிவாக அறிந்து கொள்வது நமது விசுவாச வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கும். இத்தொடரை வாசகர்கள் புரிந்து, தெளிந்து பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம் – ஆசிரியர்]



### பூசை ஆரம்பம் (தொடர்ச்சி)

**– பீடத்தினடியில் ஆயத்த செபங்கள் –**

(Prayers at the foot of the Altar)

பின்னர் குருவானவர், தாவீதரசன் தமது பாவங்களின் நினைவாலும், தம் மகன் அப்சலோமின் சூழ்ச்சியாலும் தாம் ஜெருசலேம் நகரை விட்டு விரட்டப்பட்ட துக்கத்தின் காரணமாகவும், மீண்டும் ஜெருசலேம் தேவாலய சந்நிதியில் சர்வேசுரனை மகிமைப்படுத்த வேண்டுமென்ற தமது ஏக்கத்தையும், அதற்கான தேவ உதவி கிடைக்குமென்ற நம்பிக்கையையும், வெளிப்படுத்தும் படியாக பாடிய 42-ஆம் சங்கீதத்தை குரு தாழ்ச்சியுடன் ஜெபமாகச் சொல்ல தொடங்குகிறார். தொடர்ந்து பீடப்பரிசாரகரும் அவரோடு சேர்ந்து ஜெபிக்கிறார்கள். விசுவாசிகளும் பூசைப் புத்தகத்தின் துணை கொண்டு ஜெபிக்கலாம்.

### ஜெபம்

**குரு:** "Judica me, Deus... சர்வேசுரா, பக்தியற்ற சனத்திற்கு விரோதமாய் என் நியாயத்தை விசாரித்தருள்வீராக; கெட்டவனும், கபடுள்ளவனுமாகிய மனிதரிடத்தினின்று என்னை விடுதலையாக்கும்.

**பரிசாரகர்:** ஏனெனில், சர்வேசுரா நீரே எனக்கு பலமாயிருக்கிறீர். ஏன் என்னைத் தள்ளிவிட்டீர்? என் சத்ரு என்னைத் துன்பப்படுத்தும் போது நான் துக்கங் கொண்டு திரிவானேன்?

**குரு:** உமது பிரகாசத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்; அவைகளே உமது பரிசுத்த மலைக்கும், உமது வாசஸ்தலங்களுக்கும் என்னை நடத்திக்கொண்டு போயின.

### வியாக்கியானம்

**(1)** குருவானவர் ஜெபிக்கும்போது, தம்மைச் சுற்றிலுமுள்ள உலக தீமைகள், கடவுளற்ற மனிதர்கள், கெட்டவர்கள், கபடுள்ளவர் களிடம் மட்டுமல்லாது, தமது உள்ளரங்கத்தில் தொடர்ந்து நடக்கும் மாமிச போராட்டத்திலிருந்தும் தம்மையும், தாம் நிறைவேற்ற விருக்கும் கைங்கரியத்தையும் காப்பாற்றும்படியாக ஜெபிக்கிறார். தமது பழைய மனிதனைக் களைந்தெறிய உதவிக்கு வரும்படியும், உடலின் தீமைகள், தீய உணர்வு, தீயசார்புகளிலிருந்து காத்து வெற்றி தரும்படியாகவும் சர்வேசுரனை ஜெபிக்கிறார்.

**(2)** குருவானவர் தமது சொந்த பலவீனத்தையறிந்து சர்வேசுரன் ஒருவரே தமது 'பலம்'. அவரே தம்மை வல்லமையோடு காப்பார் என்பதை உணர்ந்துள்ளார். எதிரிகள் மீது தம்மை வெற்றி பெறச் செய்வது தேவனின் உதவியும், அவருடைய அருகாமையுமே என்பதை அறிகிறார். தமது ஆன்மாவின் இரங்கத்தக்க நிலையை, கைவிடப்பட்ட நிலையை, வெறுமை, வறட்சி, ஆன்மா இருளால் அலைக்கழிக்கப்பட்டுள்ளதால், அது துயரத்தின் நிலையாகவுள்ளது.

**(3)** ஆனாலும் குருவானவரின் மனதில் நம்பிக்கை ஒளிக்கதிர் ஒளிர்கிறது. குருவானவர் சத்தியத்தின் வெளிச்சத்தையும், வரப்பிரசாதத்தையும், பக்தியையும் சர்வேசுரனிடம் கேட்டு மன்றாடுகிறார். ஆண்டவர் ஒருவரே குருவானவரின் ஆதரவு,

**பரி:** சர்வேசுரனின் பீடத்தின்முன் பிரவேசிப்பேன்.
எனது வாலிபத்தை மகிழ்விக்கும்
சர்வேசுரனிடத்தில் பிரவேசிப்பேன்.

**குரு:** சர்வேசுரா, என் சர்வேசுரா நான்
வீணையைக் கொண்டு உம்மைத்
துதிப்பேன். என் ஆத்துமமே,
ஏன் வருத்தமாயிருக்கிறாய்?
ஏன் எனக்குக் கலக்கம் வருவிக்கிறாய்?

**பரி:** சர்வேசுரனின் பேரில் நம்பிக்கையாயிரு;
ஏனெனில் அவரை இன்னும் துதிப்பேன்.
என் முகத்திற்கு இரட்சிப்பும், என் தேவனும்
அவரே!

தேற்றுகிறவர், வழிகாட்டி, அவரே பீடத்தின் உன்னதத்தை நோக்கி நடத்திச் செல்வார். கல்வாரியின் பரம இரகசியத்தை - நற்கருணை பேழையை நோக்கி வழிநடத்துபவர் அவரே.

**(4)** நற்கருணை ஆண்டவரின் பேழையானது, உண்மையிலேயே இனிமையானது. தேவனின் இரக்கத்தில் நம்பிக்கை வைத்து குருவானவர் திடமடைகிறார். உற்சாகமடைந்து பீடத்தில் ஏறிச் செல்கிறார். அங்கே ஜீவியத்தின் அப்பத்தால் குருவானவரின் இளமையான மனதை, அவரது முழு ஜீவியத்தை புதிய மகிழ்ச்சியால் ஆண்டவர் நிரப்புவார். ஆகையால் அவரது உள்ளரங்க மனிதன் ஒவ்வொரு நாளும் புதுப்பிக்கப்படுகிறான்.

**(5)** மீண்டும் துயரத்தின் உணர்வுகளும், அங்கலாய்ப்பும் தோன்றுகிறது. ஆனால் நம்பிக்கையின் திடம் அதனை மேற்கொள்கிறது. அந்த நம்பிக்கை பொறுமை, சமாதானத்தின் ஊற்று என்பதை இது காட்டுகிறது. இந்த அனைத்து வரப்பிரசாதங்களுக்காக குருவானவர் தன் வாழ்நாளில் தமது ஆண்டவரைத் துதிப்பார்.

குருவானவர் சங்கீதங்களைச் சொல்லும்போது பீட பரிசாரகர்கள் விசுவாசிகளாகிய நமது சார்பாக பதில் ஜெபம் சொல்லுகிறார்கள். ஏன் இப்படி குருவானவரோடு விசுவாசிகளும் சங்கீத வாக்கியங்களை ஜெபிக்கிறார்கள்? ஏனெனில்:

1. நாமும் இந்த உலகமாகிய கண்ணீர் கணவாயில் அகதிகளாக விடப்பட்டுள்ளோம்.
2. விசுவாசிகளாகிய நாமும் பரிசுத்த பர்வதமாகிய பீடத்தை நோக்கி நமது கண்களை உயர்த்துகிறோம். சர்வேசுரனை அணுகிச் செல்ல விரும்புகிறோம்.
3. குருவானவரோடுகூட நாமும் நமது ஒரே நம்பிக்கையும், இரட்சணியமானவருமான சர்வேசுரனிடம் மேலே பீடத்தில் ஏறிச் செல்கிறோம்.

**குறிப்பு: "Judica me, Deus..." சங்கீதம் - துக்க பூசையிலும், திருப்பாடுகளின் காலங்களிலும் குருவானவர் சொல்வதில்லை.**

பின்னர் திருவழிப்பாட்டின் முறைமையின்படியே சங்கீத முடிவில் குருவானவர் **"Gloria Patri... பிதாவுக்கும் சுதனுக்கும் இஸ்பிரீத்துசாந்துவுக்கும் தோத்திரம் உண்டாவதாக"** என்று கூறி தம்மீது சிலுவையடையாளம் வரைந்து கொள்கிறார். பீடபரிசாரகர்களும் சிலுவையடையாளம் வரைந்து **"ஆதியில் இருந்தது போல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக - ஆமென்"** என்று பதில் சொல்கிறார்கள். இதன் மூலமாக சம்மனசுக்களோடும், மோட்சத்திலுள்ள சகல அர்ச்சிஷ்டவர்களோடும், விசுவாசிகளாகிய நாமும் சேர்ந்து ஆராதனைக்குரிய மகா பரிசுத்த தமத்திரித்துவ தேவனுக்கு சங்கையும் மகிமையும் வாழ்த்தும் விசுவாச உணர்வோடும் வணக்கம் செலுத்துகிறோம். அதன் அடையாளமாக தலை வணங்குகிறோம். (தொடரும்)

# சதுர்கால தவநாட்கள்

## (Ember Days Fasts)

சதுர்கால தவநாட்கள் அல்லது நான்கு பருவகாலங்களில் வரும் தவநாட்கள் - Ember Days Fasts என்ற தவமுயற்சி பாப்பரசர் கலிஸ்தூஸ் என்பவரால் ஏற்படுத்தப்பட்டது. வருடத்தில் வரும் நான்கு பருவங்களில் அனுசரிக்கப்படும் தவமுயற்சி இதுவாகும்.

இதற்கான காரணங்கள் பலவாக இருந்தாலும், அதன் முக்கிய நோக்கம் - சர்வேசுரனை நன்றியோடு மன்றாடுவதேயாகும். பருவகால நிலைகள் சர்வேசுரனால் ஏற்படுத்தப்பட்டவை, அவற்றால் விளையும் நன்மைகளுக்காகவும், அதன் நலன்களை மனிதர்களாகிய நாம் பயன்படுத்தி நல்ல கிறீஸ்தவ ஜீவியம் வாழ தேவ உதவியை மன்றாடுவதற்காகவும், குருப்பட்டம் அல்லது தியாக்கோன் பட்டம் பெறவிருக்கும் தேவ ஊழியர்களுக்காகவும் இந்த தவநாட்களில் ஜெபிக்க திருச்சபை நம்மைத் தூண்டுகிறது.

இந்த தவநாட்கள் - மார்ச் மாதத்தில், அதாவது தவக்காலத்தின் முதல் வாரத்திலும்; கோடைகாலத்தில் இஸ்பிரீத்துசாந்துவானவரின் திருநாளின் வாரத்திலும்; செப்டம்பர் மாதத்தில் அர்ச். மிக்கேல் அதிதூதரின் திருநாளுக்கு முன்பாகவும்; டிசம்பர் மாதத்திலுமாக வருடத்தில் 4 வாரங்களின் புதன், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் ஒருசந்தி சுத்தபோசனம் அனுசரிக்கப்படுகிறது.

இன்றைய நவீன திருச்சபை இவற்றை அகற்றிவிட்டாலும், பாரம்பரியக் கத்தோலிக்கர்கள் இதனை மிகுந்த பக்தி ஆர்வத்தோடும், தாராள உள்ளத்தோடும் அனுசரித்து சர்வேசுரனுக்கு நன்றி கூறி மன்றாடி வருகின்றனர். இந்த பழக்கத்தை நாமும் கடைபிடிப்போமாக.

# கத்தோலிக்கக் குடும்பத்தின் மேன்மை

(இக்கட்டுரைத் தொடர் ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்தில் உள்ள மாகாணத்தைச் சேர்ந்த அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் குருவானவர் ஒருவர் ஆற்றிய உரைகளின் தொகுப்பான ***"The Ideal of the Catholic Family"*** என்ற சிறு நூலின் தமிழாக்கமாகும்.)

முதல் உரை: **கத்தோலிக்க இல்லம்** (தொடர்ச்சி)

## தொலைக்காட்சியால் வரும் ஆபத்து!

திருச்சபையின் எதிரியானவன் கத்தோலிக்க இல்லங்களில் ஒரு கொடூரத் தாக்குதலை நிகழத்தியுள்ளதால், இக்காலங்களில் பெற்றோர்களுக்கு ஒரு கடினமான அலுவல் உள்ளது என்பதை நான் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். உங்களது குழந்தைகளின் ஆன்மாக்களை நரகத்தில் அமிழ்த்த முயற்சிக்கும் சாத்தானைப் பொருத்தவரையில் இது ஒரு உண்மையானப் போர். நாம் விழிப்பாக இருப்போமாக. அந்தோ! உங்களில் சிலர் இந்த விஷயத்தில் இன்னமும் கூட, மிகவும் கவனமில்லாமல் தான் இருக்கிறார்கள். இது முக்கியமான காரியமாதலால், நான் உங்களுக்கு ஒரு சிறிய தெளிவான அறிவுரையைத் தருகிறேன். அது என்னவெனில்: முதலில் உங்கள் வீட்டிலுள்ள டி.வி. பெட்டியை வெளியே வீசியெறியுங்கள்.

அநேகப் பெற்றோர்கள், தங்கள் குழந்தைகள் எப்பொழுதெல்லாம் விரும்புகிறார்களோ, அப்பொழுதெல்லாம் ஒரு நாளைக்குப் பல மணி நேரங்களானாலும் எந்தவிதக் கட்டுபாடும் இல்லாமல், டி.வி. பார்க்க அனுமதிக்கிறார்கள். அதில் உண்மையாகவே (கற்புக்கெதிரான, தீவிரவாதத்தைத் தூண்டுகிற, உலகத்தன்மையான) கெட்ட ஆபத்தான நிகழ்ச்சிகள் உள்ளன. இதற்குச் சற்றும் குறையாத தீமைகள் பயக்கும் மற்றொரு ஆபத்தும் கூட உள்ளது!

ஜாண் சீனியர் என்பவர், "கிறீஸ்தவக் கலாச்சாரத்தை மீண்டும் ஏற்படுத்துதல்" என்ற தனது அருமையான நூலில் டி.வி. பார்ப்பதனால் ஏற்படும் இரண்டு தீமைகளைக் குறிப்பிட்டுள்ளார். ஒன்று உடல் மட்டும் மனரீதியான அசமந்த நிலையை ஏற்படுத்தும் ஆபத்து, மற்றொன்று உண்மையான யதார்த்த நிலையை மறைத்து, திரித்துக் காட்டி கற்பனையில் வாழும் நிலையை உருவாக்குவதாகும். டி.வி. ஆனது மெல்ல, மெல்ல மனிதர்களின் மனங்களைக் கட்டுப்படுத்தும் போதை மருந்தைப் போன்று, கொஞ்சம் கொஞ்சமாக அவர்களை மந்தபுத்தி உள்ளவர்களாகவும், சுயமாகச் சிந்திக்கும் ஆற்றல் அற்றவர்களாகவும் மாற்றுகிறது என்று குறிப்பிட்டுள்ளார். சங். ஓ கென்னல் சுவாமி என்பவர் சற்று நகைச்சுவையாக "மகுடியின் முன்பாக மயங்கும் பாம்பை'' போல் மனிதர்களைத் தன்வயப்படுத்தி, மனித மாண்பையே உதரச்செய்து பலமணி நேரங்கள் தம்முன் பசைபோல் ஒட்டி, அமர்த்தி வைத்து விடுகிறது. அவர்கள் வசியம் செய்யப்பட்ட முயல் போல் அசைவற்றுக் கிடக்கிறார்கள் என்று கூறுகிறார். சிறுவர்களை, முகாம்களிலோ அல்லது வேறு அலுவல் நேரத்திலோ பார்க்கும் போது, பார்த்தமாத்திரத்தில் ஒரு குருவானவரான என்னால், யார் அதிகம் டி.வி. பார்ப்பார்கள் அல்லது மாட்டார்கள் என்று உடனடியாகக் கூறிவிட முடியும். டி.வி. பார்க்கும் குழந்தைகள் தவறான குணாதிசயங்களை வெளிப்படுத்துவார்கள். எதிலும் கவனம் செலுத்த சிரமப்படும் அவர்களுக்கு வேடிக்கை பொழுதுபோக்குகள் இல்லாவிட்டால் எந்த காரியத்திலும் சலிப்படைந்து விடுவார்கள். எந்தவிதமானப் புது சிந்தனைகளுக்கும் ஆர்வம் காட்டாதவர்களாகவும், அதைவிட மிகவும் மோசமாக, ஜெபிக்கவும், தியானிக்கவும் விருப்பம் இல்லாதவர்களாகவும் இருப்பார்கள்.

இந்தப் பிரசங்கத்தை இன்னும் நீடிக்க நான் விரும்பவில்லையானதால், ஒரு சில கருத்துக்களை மட்டும் சுருக்கமாகக் கூறிவிடுகிறேன். மேற்கத்திய ஆபாச ராக் இசை உங்கள் இல்லங்களில் தடை செய்யப்பட வேண்டியதொன்று. நமதாண்டவர் வேண்டுமா அல்லது சாத்தான் வேண்டுமா? என்பதை நீங்கள் தெரிவு செய்து கொள்ளுங்கள். இரண்டும் வேண்டுமென்றோ, நடுநிலையில் உள்ளேன் என்றோ இருக்க முடியாது. அர்ச். இஞ்ஞாசியார் தமது "ஞானபயிற்சிகளில்'' குறிப்பிடுவது போல, 2 குழுக்கள், 2 படைகள், 2 கொடிகள் தான் உள்ளன. ராக் இசைகள் போன்றவை நிச்சயம் பசாசின் முகாமைச் சேர்ந்தவையே. எந்த ஒரு பொருளைப்பற்றிய புத்தகத்தை வாசித்தாலும், அதன் கருத்துக்கள் உங்களை நிச்சயம் பாதிக்கும். அதன் கருத்துக்கள் உங்களுக்கு ஏற்புடையதாகி விடும் என்பது நிச்சயம். எனவே யதார்த்தமாக இருங்கள். ஒரு தடவை ஒரு பாரம்பரிய கத்தோலிக்கக் குடும்பத்தினரோடு தங்கியிருந்தது நினைவுக்கு வருகிறது. நான் தங்குவதற்கு தங்களது 15 வயது மகனின் படுக்கை அறையை ஒதுக்கியிருந்தார்கள். அங்கே சுவரில் ஒரு அழகிய சேசுவின் திருஇருதயப் படம் மாட்டப்பட்டிருந்தது கண்டு மகிழ்ச்சியடைந்தேன். பிறகு அப்படியே அங்கேயிருந்த அலமாரியின் மீது நிறைய கேசட்டுகள் அடுக்கப்பட்டிருந்தது கண்டு சற்று மேலோட்டமாகப் பார்த்தேன். அதில் "நரகம் ஒன்றும் தீய இடமில்லை'' என்ற பிரபல்யமான பாடல்கள் அடங்கிய AC/DC நாடாக்கள் கேசட்டைக் கண்டு திடுக்கிட்டுப் போனேன். இது ஒரு கத்தோலிக்க இல்லத்தில் என்ன இருக்கக் கூடாது என்பதற்கு சிறந்த உதாரணமாகும். இதே போன்று புத்தகங்கள் விஷயத்திலும் உள்ளது. மற்றொரு தடவை வேறொரு குடும்பத்தைச் சந்திக்கப் போயிருந்தேன். அவ்வீட்டிலுள்ள ஒரு பிள்ளையின் அறைக்குள் சென்றேன். அங்குள்ள புத்தக அலமாரியில் ஜனரஞ்சமான காதல் கதைகள் அடங்கிய புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்தது. அத்தகையப் புத்தகங்கள் நமது பெண்பிள்ளைகளின் மனதைப் பாதிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. உங்கள் வசம் கொடுக்கப்பட்ட விலைமதிப்பில்லாத ஆன்மாக்களை நல்லவர்களாக, விசுவாசமுள்ளவர்களாக, ஆன்ம அழகுள்ளவர்களாக எல்லாம் வல்ல சர்வேசுரனிடம் ஒப்படைப்பது உங்கள் கடமையாகும். அதனால் மீண்டும் கூறுகிறேன், நீங்கள் நன்மாதிரி காட்ட மறவாதீர்கள்.

(தொடரும்)

# செய்திகள்

## சப்.தியாக்கோன் பட்டம் பெறும் இந்திய குரு மாணவர்!

இந்தியாவின் மும்பையைச் சேர்ந்த சங்.திரு. கிரகோரி என்ற குருமாணவர் வருகிற மார்ச் 9-ம் நாளன்று ஆஸ்திரேலியா நாட்டிலுள்ள அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் திருச்சிலுவை குருமடத்தில் சப்.தியாக்கோன் பட்டத்திற்கு உயர்த்தப்படுகிறார்.

**- சப்.தியாக்கோனுக்காக ஜெபிப்போம்.**

## இத்தாலி நாட்டில் நடைபெற்ற இருபெரும் அவசங்கைகள்.

இத்தாலியில் L'expresso என்ற பத்திரிகையின் நிருபரான ரிக்கார்டோ போக்கா என்பவன் விளம்பரத்திற்காக தூரின், மிலான், நேப்பிள்ஸ், பால்லர்ம் மற்றும் உரோமைய லூத்தரன், மேரி மேஜர் அடங்கிய 24 தேவாலயங்களில் ஜனவரி 7 முதல் 21 வரையிலான நாட்களில் கள்ளப்பாவசங்கீர்த்தனம் செய்து அதனை கேலியாக விமர்சனம் செய்து வெளியிட்டுள்ளான்.

உரோமைய மேற்றிராசனத்திலுள்ள அர்ச். இடைவிடா சகாயமாதா பேராலயத்தில் வசீகரிக்கப்பட்ட நற்கருணை அப்பங்கள் ஜனவரி 30-ம் நாளன்று களவாடப்பட்டன. சமீப காலமாக இத்தாலியில் இத்தகைய சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. வசீகரிக்கப்பட்ட நற்கருணை அப்பங்கள் சாத்தான் மதத்தினரின் வழிபாட்டில் அவசங்கை செய்யப்படவே திருடப்படுகின்றன என்று அறியப்படுகிறது.

**- இப்படுபாதகச் செயல்களால் நமதாண்டவருக்கு நேர்ந்த நிந்தைகளுக்குப் பரிகாரம் செய்வோம்.**

# தமிழில் உண்மையான வேதாகமத்தை அச்சிடுகிறோம்!

**சர்வேசுரன் தம்மையே, நமக்கு இருபெரும் ஊற்றுகளின் (sources of revelation) வழியாக வெளிப்படுத்தியுள்ளார். அவை: எழுதப்படாதப் பாரம்பரியமும், எழுதப்பட்ட வேதாகமப் புத்தகங்களும் ஆகும். இவ்வேதாகமம் பன்மொழியில் புலமைப் பெற்ற அர்ச். ஜெரோம் (கி.பி. 340 – 420) என்பவரால் லத்தீன் மொழியில் மொழிப்பெயர்க்கப்பட்டது. இதைத் தான் "வுல்காத்" - Vulgate வேதாகமம் என்கிறோம். இதை திரிதெந்தீன் பொதுச்சங்கம் தமது 4–வது அமர்வில், 8 ஏப்ரல், 1546–ல் கத்தோலிக்கத் திருச்சபையின் அதிகாரப்பூர்வமான சத்திய வேதாகமம் என்று அறிவித்தது. இந்த லத்தீன் வுல்காத் வேதாகமம் தமிழில் மொழிப்பெயர்க்கப்பட்டு அச்சிடப்பட்டது. ஆனால் இந்த வேதாகமம் தற்போது தமிழகத்தில் எவ்விடத்திலும் கிடைப்பதில்லை என்பதாலும்; பதிதங்களும், தப்பறைகளும் மலிந்த "திருவிவிலியம்" மட்டுமே விசுவாசிகளின் விருப்பத்திற்கு மாறாக, எக்குமெனிசம் (Ecumenism) என்ற பெயரால் திணிக்கப்படுவதால், கத்தோலிக்கப் பாரம்பரியத்தைக் காக்க தன்னால் இயன்ற முயற்சிகளை எடுத்து வரும் அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை, வுல்காத் வேதாகமத்தின் தமிழ் மொழிப்பெயர்ப்பை, மறுபடியும் விசுவாசிகளுக்கு கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், அதை அச்சிட ஏற்பாடு செய்து வருகிறது. இப்புனிதக் கைங்கரியத்தில் பங்கெடுக்கக் கத்தோலிக்க விசுவாசிகளாகிய உங்களுக்கும் கடமையுண்டு. இக்கடமையை உணர்ந்து இம்முயற்சிக்கு உங்களது தாராள நன்கொடைகளைத் தந்து உதவுமாறு வேண்டுகிறோம்.**

**இந்த முயற்சி வெற்றி பெற்று, தகுந்த பலனளிக்கும்படி மன்றாடுங்கள்.**

**St. Pius X Society,**
**Palayamkottai.**

**அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை**
**பாளையங்கோட்டை**

**நன்கொடை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:**

St. Pius X Society
#1, Marcel Lefebvre Place, Annie Nagar, Seevalaperi Road,
Palayamkottai, Tirunelveli – 627 002.
Ph: 0462-2586201; 2572389. e-mail: sspxindia@gmail.com

**"மங்கள வார்த்தை சொல்ல வந்த தேவதூதருக்கு "ஆம்" என்று கூறி, கன்னிமாமரி தனது விசுவாசத்தால் பரலோக வாசல்களை நமக்குத் திறந்தார்கள் !"**

*— அர்ச். அகுஸ்தினார்*